REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: தை 6உ சனி (19—1—57) ★ ★ வெளியீடு: தை 7உ ஞாயிறு (20—1—57) [இதழ் 191

தமிழ் நாட்டில் தேர்தல் தேதிகள்!

★

தமிழ் நாட்டில் மார்ச் 1, 4, 6, 8, 11 ஆகிய தேதிகளில் தேர்தல்கள் நடைபெறும்.

காலை 7 மணிமுதல் பகல் 12 மணி வரையிலும், பின்னர் மாலை 1 மணிமுதல் 4 மணி வரையிலும் தேர்தல் சாவடிகளில் வாக்குப் பதிவுகள் செய்யப்படும்.

சட்டசபை, மக்கள் சபை அபேட்சைப் பத்திரங்கள் தாக்கல் செய்யும் கடைசி நாள் ஜன. 29

அபேட்சைப் பத்திரங்களை திரும்பப்பெறும் கடைசிநாள் பிப். 4. மார்ச் 31-ந்தேதிக்குள் தேர்தல்கள் முடிந்துவிடும்.

ஜனநாயகம் தழைத்தோங்க:

தேர்தல் களத்தில் தி. மு. கழகம்

அண்ணா—பொதுச்செயலாளர் உள்ளிட்ட முன்னணி வீரர்கள் அனைவரும் போட்டியிடுகின்றனர்

★

(கழக அபேட்சகர் முதல் பட்டியல்)

அண்மையில் நடைபெறவிருக்கும் சென்னை சட்டசபை, மக்கள்சபைக்கான பொதுத்தேர்தலில் கீழ்க்கண்டவாறு திராவிட முன்னேற்றக் கழக அபேட்சகர்கள் போட்டியிடுகிறார்கள்:—

★★★★★★★★-★★★★★★-★★★

அண்ணா

சட்டசபைக்கு காஞ்சீபுரம் தொகுதியில் போட்டியிடுகிறார்.

★★★★★★★★★★★★★★★-★★

சென்னை மாவட்டம்

பேசின் பிரிட்ஜ்: என். வி. நடராசன்
எழும்பூர்: க. அன்பழகன்
பெரம்பூர் (தனி): சத்தியவாணிமுத்து
வண்ணாரப்பேட்டை: என். ஜீவரத்தினம்

செங்கற்பட்டு மாவட்டம்

காஞ்சீபுரம்: சி. என். அண்ணாதுரை
ஸ்ரீபெரும்புதூர்: சி. வி. எம். அண்ணாமலை
பொன்னேரி (பொது): டி. சண்முகம்
,, (தனி): ஒ. செங்கம்
உத்திரமேரூர்: சி. பஞ்சாட்சரம்
மதுராந்தகம் (பொது): கொளத்தூர். கோதண்டன்
,, (தனி): ஆர். அங்கேசன்

★★★★★★★★-★★★★★★-★★★

ஜி. பி. சோமசுந்தரம்

சட்டசபைக்கு சேந்தமங்கலம் தொகுதியில் போட்டியிடுகிறார்.

★★★★-★★★★★★-★★★★★★★

வட ஆற்காடு மாவட்டம்

செங்கம்: சி. பி. சிற்றரசு
திருவண்ணாமலை (பொது): ப. உ. சண்முகம்
வாணியம்பாடி: எம்.பி.வடிவேலு
வேலூர்: எம். பி. சாரதி
அரக்கோணம்: ஏ. எல். சி. கிருஷ்ணசாமி
செய்யாறு: க. கோவிந்தன்
போளூர்: களம்பூர் அண்ணாமலை
தரிஞ்சாபுரம்: முருகையன்
திருப்பத்தூர்: எம். நடேசன்

சேலம் மாவட்டம்

சேலம் I: இரா. நெடுஞ்செழியன்
சேந்தமங்கலம்: ஜி. பி. சோமசுந்தரம்
ஆத்தூர் (பொது): எம். பி. சுப்பிரமணியம்
தருமபுரி: பி. எம். குப்புசாமி
இராசிபுரம்: கே.வி.கே.இராமசாமி
தாராமங்கலம்: கே. எஸ். சின்னப்பன்
மேட்டூர்: க. கு. சின்னுசாமி
திருச்செங்கோடு: (பொது) எஸ். ரங்கசாமி

★★★★★-★★★★★★★★-★★★★★

கே. ஏ. மதியழகன்

சட்டசபைக்கு உடுமலைப் பேட்டை தொகுதியில் போட்டியிடுகிறார்.

★★★★★★★-★★★★★★★-★★★

தென் ஆற்காடு மாவட்டம்

வளவனூர்: ஏ. கோவிந்தசாமி
திருக்கோயிலூர் (பொது): டி. என். ஜி. அண்ணாமலை
சிதம்பரம் (பொது): பொன். சொக்கலிங்கம்
புவனகிரி: ரத்தின பாலகுருசாமி
கள்ளக்குறிச்சி (பொது): சி. நடராசன்
(தனி): எம். ஆனந்தன்
விழுப்புரம்: எம். சண்முகம்
திண்டிவனம் (பொது): டி. கே. வீரராகவன்
தனி: அமிர்தலிங்கம்
உளுந்தூர்பேட்டை: பெ. போ. ராமன்
நெல்லிக்குப்பம் (பொது): வி. கிருஷ்ணமூர்த்தி
விருத்தாசலம்: எம். செல்வராஜ்

★★★★★★-★★★★★-★★★★★★

மு. கருணாநிதி

சட்டசபைக்கு குளித்தலை தொகுதியில் போட்டியிடுகிறார்.

★★★★★★★-★★★★★★★-★★★

★★★-★★★★★-★★★★★★★★★

என். வி. நடராசன்

சட்டசபைக்கு சென்னை — பேசின்பிரிட்ஜ் தொகுதியில் போட்டியிடுகிறார்.

★★★★★★★★-★★★★-★★★★★

இராமநாதபுரம் மாவட்டம்

திருக்கோட்டியூர்: கண்ணதாசன்
சிவகெங்கை: வி. வீரப்பன்
ஸ்ரீவில்லிபுத்தூர் (பொது): மா. குருசாமி
(தனி): எஸ். செல்லையா

நெல்லை மாவட்டம்

தூத்துக்குடி: எம்.எஸ். சிவசாமி
கடம்பூர்: கே.ஆர்.எம்.ஆர். ஜனார்த்தனம்
அம்பாசமுத்திரம்: எஸ்.கந்தசாமி
சங்கரன்கோயில்: (பொது): ஏ. டி. வெள்ளைத்துரை
கடயம் (பொது): எம்.வி. சூர்யநாதன்
(தனி): ஏ. இராமநாதன்
ஆலங்குளம்: எஸ். அருணாசலம்

கோவை மாவட்டம்

உடுமலைப்பேட்டை: கே. ஏ. மதியழகன்
சென்னிமலை: எஸ். கே. சுந்தரம்
கோவை II: (பொது): M. M. சண்முகசுந்தரம்
(தனி): ஆர். கே. சடையப்பன்

மதுரை மாவட்டம்

மதுரை (மத்திய தொகுதி): எஸ். முத்து
தேனி (பொது): எஸ். எஸ். ராசேந்திரன்
ஆத்தூர்: வி. எஸ். எஸ். மணி
மேலூர் (பொது): ஏ. வேல்சாமி
,, (தனி): பி. சமதர்மம்
திண்டுக்கல்: ஆர். சனார்த்தனம்
கொடைக்கானல்: வி. குருசாமி

★★★-★★★★-★★★★★★★★★★

ஈ. வி. கே. சம்பத்

மக்கள் சபைக்கு நாமக்கல் தொகுதியில் போட்டியிடுகிறார்.

★★★★-★★★★-★★★★★★★★★

★★★

பொதுச்செயலாளர் வேண்டுகோள்

கழகத் தோழர்களே! ஆதரவாளர்களே! பொதுமக்களே!

திருச்சி மாநில மாநாட்டில் எடுத்த முடிவுக்கேற்ப நாடு வாழ, நலிவுபோக, ஜனநாயகம் ஓங்க, சமதர்மம் தழைக்க, நீதி நிலைபெற, நேர்மை துலங்க தி. மு. கழகத் தோழர்கள் பொதுத் தேர்தலில் பூரிப்போடும் பெருமிதத்தோடும் ஈடுபட உங்கள் ஆதரவை அன்புடன் நாடிவருகின்றனர். உண்மை ஊழியம் புரியவரும் கழக அபேட்சகர்களுக்கு உள்ளம், உரை, உடல், பொருள் ஆகியவற்றால் பேருதவி அளித்து, வெற்றியைத் தேடித்தர உங்கள் ஒத்துழைப்பை வேண்டிக்கேட்டுக் கொள்கிறேன்.

தேர்தல் காலத்தில் மாற்றார்கள் வீண் பொய் வதந்திகளைக் கிளப்புதல், கழகத் தவரை இழித்துப் பழித்துப் பேசுதல், வன்முறையில் தாக்குதல்போன்ற செயல்களில் இறங்கக்கூடும். கழகத் தோழர்களும் ஆதரவாளர்களும் அவற்றைப் பொருட்படுத்தாமல் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகியவைகளைக் கடைப்பிடித்துப் பணியாற்ற வேண்டுமென வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்று, முதல் பட்டியல் வெளியிடப்படுகிறது. மேற்கொண்டு கழக அபேட்சகர்களின் சில பட்டியல்கள் தொடர்ந்து வெளியிடப்படும். கழக ஆதரவாளர்கள் என்ற முறையில் தேர்ந்தெடுக்கப்படும் தொகுதிகளின் விவரமும் விரைவில் வெளியிடப்படும்.

அன்பன்,

இரா. நெடுஞ்செழியன்
பொதுச்செயலாளர், தி. மு. கழகம்

★★★

★★★★★★-★★★★★★-★★★★★

இரா. நெடுஞ்செழியன்

சட்டசபைக்கு சேலம்-1 தொகுதியில் போட்டியிடுகிறார்.

★★★★★★-★★★★★★★-★★★★

திருச்சி மாவட்டம்

குளித்தலை: மு. கருணாநிதி
லால்குடி: அம்பில் தருமலிங்கம்
முசிறி (பொது): முத்துக்கருப்பன்
,, (தனி): துரைராஜ்
கரூர்: எம். குழந்தைவேலு
அரவக்குறிச்சி: என். ரத்தினம்
ஆலங்குடி (பொது): வி. சுப்பையா
திருச்சி II: காமாட்சி
டி. பழூர்: எஸ். ராமசாமி
அரியலூர்: நாராயணன்
பெரம்பலூர் (தனி): இரத்தினசாமி
பஞ்சப்பட்டி: வி.குழந்தைவேலு

தஞ்சை மாவட்டம்

அதிராம்பட்டினம்: என். எஸ். இளங்கோ
தஞ்சை: எஸ். பெத்தண்ணன்
மாயவரம் (பொது): குடவாசல் கிருஷ்ணமூர்த்தி
திருத்துறைப்பூண்டி (பொது): ந. தருமலிங்கம்
(தனி): அம்பிகாபதி
பட்டுக்கோட்டை: வி. அருணாசலம்
அறந்தாங்கி: ஷேக் அப்துல்காதர்
பாபநாசம் (பொது): பி. சி. துரைசாமி
(தனி): அரிஅரன்

மக்கள் சபை அபேட்சகர்கள்

மக்கள் சபைக்குக் கீழ்க்கண்டவாறு திராவிட முன்னேற்றக் கழக அபேட்சகர்கள் போட்டியிடுவார்கள்:—

தென் சென்னை: பி. பாலசுப்பிரமணியம்
சிதம்பரம்: (பொது): குழந்தை (மூப்பர்)
(தனி): புலவர் ஆறுமுகம்
நாமக்கல்: (பொது): ஈ. வெ. கி. சம்பத்
(தனி): எம். பி. வடிவேலு
கரூர்: இரா. செழியன்
திருச்சி: எம். எஸ். மணி

★

கீழ்க்கண்ட தொகுதிகளுக்கு பின்னர் அபேட்சகர்களின் பெயர் அறிவிக்கப்படும்:—

1. திருவள்ளூர்
2. திருப்பத்தூர் (வ.ஆ.)
3. திருச்செங்கோடு
4. சேலம்
5. திருவண்ணாமலை

—தேர்வுக்குழு தி. மு. க.

★★★-★★★★-★★★★★★★★★★

க. அன்பழகன்

சட்டசபைக்கு சென்னை — எழும்பூர் தொகுதியில் போட்டியிடுகிறார்.

★★★★★-★★★★★★★★-★★★★

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 19—1—'57 சனி

கடமை வீரரே, காரியமாற்றுவீர்!

தமிழகம் மிகப் பிரகாசமானதோர் எதிர்காலத்தைச் சந்திக்க இன்று தன்னைத் தயாரித்துக் கொண்டிருக்கிறது. ஆம்! திராவிட முன்னேற்றக் கழகம் —திராவிடர்கள் மீண்டும் ஓர் முறை உலகின் முதல்தரமான சமுதாயமாகத் தலைதூக்கி ஒளிவிடவும், தங்களின் போற்றுதலுக்குரிய தொன்மைமிகு பண்பாட்டையும் வரலாற்றுப் பெருமையையும் காப்பாற்றிக் கொள்ளவும், இழந்துவிட்ட சுதந்திர ஆதிபத்திய உரிமையினை நிலைநாட்டிக்கொள்ளவுமாக வடநாட்டு ஏகாதிபத்தியப் பிடிப்பிலிருந்து தங்களை விடுவித்துக்கொள்ளத் தாங்கள் தோற்றுவித்த திராவிட முன்னேற்றக்கழகம்—தமிழர்களை, பிரகாசமானதோர் எதிர்காலத்திற்கு அழைத்துச்செல்ல தீவிரமாகச் செயலாற்றி வருகிறது.

தமிழர்தம் உடனடித் தேவையான ஓர் நல்லாட்சியை நிறுவ தி. மு. கழகம், பொதுத் தேர்தலில் ஈடுபடுகிறது.

'எங்களைத் தட்டிக்கேட்க எவருமில்லை' என்ற போக்கில் சென்றுகொண்டிருக்கும் காங்கிரசுக் கட்சி, தேர்தலைப்பற்றிய நமது முடிவிற்குப் பிறகு பெற்றுள்ள உருமாறறங்கள் நாட்டு மக்களுக்கு நன்றாகத் தெரிகின்றன.

'அதிகாரத்தில் அமர்ந்திருப்போரது உரிமைகள் எதிர்க்கட்சியினரின் உரிமைகளைக் கொண்டு வரையறுக்கப்பட்டனவாகும்' என்ற ஜனநாயகத்தின் அடிப்படை இயல்பினை மறந்து, தன் மூப்பாக—தான்தோன்றித்தனமாகக் காட்டாட்சி நடத்திவரும் காங்கிரசுக் கட்சிக்கு நமது தேர்தல் முடிவு குலைநடுக்கத்தைத் தந்திருப்பதையும் நாடு நன்கறியும்.

பண்பட்ட ஜனநாயக நாடுகளில் எல்லாம், ஆளும் கட்சியினரைவிட எதிர்க்கட்சியினரிடத்தில்தான் மக்கள் அதிக நம்பிக்கையும் மதிப்பும் வைப்பர்; காரணம், மக்கள் அமைத்த ஆட்சி வழிதவறிச் செல்லும்போது, அவற்றை மக்களுக்காக எடுத்துரைப்பவர்கள் அவர்கள்தான். ஆனால் இந்த உண்மையை உணராதவர்கள்தான், கடந்த காலத்தில் எதிர்க்கட்சியிலமர்ந்து வந்திருக்கிறார்கள். இன்னும் சற்றுத் தெளிவாகச் சொல்லவேண்டுமானால், ஜனநாயகம் என்ற அரசுமுறைக்கு உதட்டளவில் விசுவாசமும ஆதரவும் தெரிவித்துவிட்டு அதனால் பயனடைந்து கொண்டிருக்கும் ஜனநாயகத்தின் பரம வைரிகள்தான், பெரும்பாலானவர்களாக எதிர்க்கட்சி நாற்காலிகளை அலங்கரித்து வந்திருக்கிறார்கள். எதிர்க்கட்சி என்ற புனிதமான உயரிய இடத்தின் மகத்தான பொறுப்புகளைத் துச்சமென மதித்து, இந்த நாட்டு மக்களின் ஜீவநாடியான பிரச்சினைகள் வந்தபோதெல்லாம் வாய்மூடி மௌனிகளாகவோ பொறுப்பற்ற போக்கினராகவோதான் நடந்து வந்திருக்கிறார்கள்.

தமிழருக்கு நல்லாட்சி வேண்டும்; அதற்கு நல்லதோர் எதிர்க்கட்சியும் வேண்டும். இவை இரண்டும் கடந்த ஒன்பதாண்டுக் காலத்தில் தமிழர்க்குக் கிடைக்கவில்லை. இனி மேலாவது கிடைக்கச் செய்வதற்காகத்தான் ஜனநாயகக் கடமையை ஏற்றுக்கொண்டிருக்கிறது நமது தி. மு. கழகம்.

புதியதோர் ஜனநாயகப் பாரம்பரியத்தின் பெருமைக்குரிய கர்த்தாவான தி. மு. கழகம் தேர்தலில் ஈடுபடுவது சில போலி ஜனநாயகவாதிகளுக்கும்கூட அச்சத்தையும் அதிருப்தியையும்—ஏன்—அருவருப்பையும்கூடத் தோற்றுவித்திருக்கிறது; அது இயற்கைதான்!

கடந்த ஒன்பதரை ஆண்டுக் காலத்தில் வடநாட்டு ஏகாதிபத்தியவாதிகள், தங்களது 'பகாசுரப் பசி'க்கு திராவிட மக்களை இரையாக்கி வந்திருக்கும் கொடுமைகளை எல்லாம், இந்நாட்டில் இருந்து வந்திருக்கும் பல காங்கிரஸ் மந்திரி சபைகள், 'தேவ ஆளுகைகள்' என்றே கருதி, அவற்றிற்கு டெல்லிப் பெரியவர்களுடன் தங்களையும் பிணையாளிகளாக்கி வந்திருக்கின்றனர். இதை திராவிட மக்கள் இனியும் சகித்துக் கொண்டிருக்கமாட்டார்கள் என்பதை, வரப்போகும் பொதுத் தேர்தல் உலகிற்கு எடுத்துக்காட்டப்போகிறது.

டெல்லியின் ஏகாதிபத்தியப் போக்கையும், அது தென்னாட்டு மக்களுக்கு இழைத்துவரும் இமாலயப் பெரிய வஞ்சனைகளையும் அநீதிகளையும், 'தேவர்களின் திருச்சித்தம்' என்றும் தேவ ஆளுகை என்றும் கருதி, மனம் விரும்பி சகித்துக்கொண்டு ஆட்சிபீடத்தினை அலங்கரித்துவரும் டெல்லியின் பிரதான கங்காணிகளான காமராசர்களுக்குத் தரப்படும் அறைகூவல்தான், இன்றைய 'நம்நாடு' இதழில் வெளியாகும் கழக அபேட்சகர்களின் பட்டியல்!

வட நாட்டிற்கு 'ஏக இந்தியா' என்ற அமைப்பின் மூலம் தென்னாடு அடிமையாக்கப்பட்டிருக்கிறது என்ற உண்மையை மூடி மறைத்துவிடவும், வடநாட்டிற்கும் தென்னாட்டிற்கும் இணைப்புப் பாலங்களை அமைக்கவும், தாங்கள் இதுவரை கற்ற பாடங்கள் போதாமையால் புதிய ஞானாசிரியர்களைத் தேடித் திரியும் வடநாட்டுப் பெரியவர்களின் வஞ்சகத்தை — ஆணவத்தை — இறுமாப்பை இடுப்பொடிக்கப் போகிறார்கள், திராவிடர்கள். இதோ பட்டியலில் காணப்படும் கழக வீரர்கள், அதற்காகத்தான் சட்டசபை எனும் களம் செல்ல இருக்கிறார்கள்.

கழகத்தின் சார்பில் தேர்தலில் போட்டியிடும் அரிய வாய்ப்புப்பெற்ற நண்பர்களே! முன்னணி வீரர்களே! ஜனநாயகத்தின் பாதுகாவலர்களே! உங்கள் ஜனநாயகக் கடமையுணர்வைப் போற்றுகிறோம்; உங்கள் வீரத்தை வாழ்த்துகிறோம்; வெற்றிபெற்று, கழகத்திற்குப் பெருமை தேடித்தர விழைகிறோம்.

திராவிடரே! தீரரே! திராவிடத்தின் சிறுமை பெருமைகளைத் தன்னகத்தே கொண்ட குருதியோட்டம் படைத்த கழகத் தோழர்களே! கண்ணியத்தின் காவலர்களே! கடமை வீரர்களே! பட்டியல் வந்துவிட்டது; தேர்தல் மிகமிக வேகமாக நெருங்கிக் கொண்டிருக்கிறது; காலம் அருகிக் கொண்டிருக்கிறது; சில நாட்களே உள்ளன — அவையும் சிறகடித்துப் பறந்துவிடும். ஆகவே, செயல்படுவீர்—தீவிரமாகச் செயல்படுவீர்! உங்கள் செயலில் வீரம் இருக்கட்டும்—வீம்பு வேண்டாம்! பண்பு இருக்கட்டும் — படாடோபம் வேண்டாம்! ஆர்வம் இருக்கட்டும் — ஆத்திரத்திற்கு இடமளித்துவிடாதீர்! கண்ணியம் குன்றாமல், கட்டுப்பாடு குலையாமல் கடமையாற்றுவீர்! என்றும்போல் இப்போதும், கழகத்திற்கு வெற்றி தேடித் தருவீர்! விரைவீர்! விரைவீர்!

நாட்டவரே! நல்லவரே! உங்கள் நலிவுகள் நீங்க—நீங்கள் நிம்மதியாக வாழ—நல்ல ஆட்சி அமைய—சனநாயகம் காப்பாற்றப்பட-இழிவு அகல, சிறுமை ஒழிய--பெருமைக்குரிய பழம்பெரும் பண்பு பாதுகாக்கப்பட, நாடு மீள, விடுதலை பெற, வீரர்களை—கழக வீரர்களை வெற்றி பெறச் செய்யுங்கள்.

உங்களில் சிலராகிய நாங்கள், இன்றுபோல் என்றும் உங்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமாகிப் பணிபுரிவோம்!

தமிழர் கோரிக்கைக்கு இணங்க பண்டா மறுப்பு

முடிவை மாற்றுவது சிங்களவரிடை சலசலப்பை உண்டாக்குமாம்

போராட்டத்தைக் கைவிடுமாறு எச்சரிக்கிறார்

கொழும்பு, சன. 18—

மோட்டார் வண்டிகளின் பதிவு எண் பலகைகளில் பதிவுச் சின்னமாக 'ஸ்ரீ' என்று சிங்களத்தில் பொறிப்பதைக் கைவிடுவதற்கில்லை என்று கூறியிருப்பதின்மூலம், பிரதமர் பண்டாரநாயகா இலங்கைத் தமிழரின் கோரிக்கையை நிராகரித்து, கோபத்தை அதிகரித்திருக்கிறார்.

சர்க்கார் கட்சியின் மக்கள் சபை உறுப்பினர்கூட்டத்திலும் பண்டாவின் இந்தக் கருத்து ஏற்றுக் கொள்ளப்பட்டதாம்.

“சிங்கள எழுத்தை உபயோகிப்பதற்கு ஏதேனும் நியாயமான காரணங்களைக் காட்டி எதிர்ப்பு தெரிவித்திருந்தாலாவது அவற்றைப் பரிசீலிக்கலாம்; ஆனால் தமிழரசுக் கட்சி மேற்கொள்ளுவதாக அச்சுறுத்துகிற சட்ட விரோதமான நடவடிக்கைகள், அப்படிப் பரிசீலிக்கும் வாய்ப்பினையும் அற்றுப்போகச் செய்துவிட்டது.

தமிழரின் நோக்கம்

“சிங்கள எழுத்தைப் பொறிப்பதில் தங்களுக்குக் கஷ்டங்கள் இருப்பதினால் அல்ல, தமிழர்கள் இதனை எதிர்ப்பது; எதிர்ப்பின் நோக்கமெல்லாம் சர்க்காரின் தனிச சிங்கள மசோதாவுக்கு எதிராகத்தான்; மேலும், இதனைச் சாக்காகக் கொண்டு, தமிழருக்கு ஒரு பெடரல் சர்க்கார் அமைக்க—அல்லது தனிச் சர்க்காரே அமைக்க விரிவான பெரும் போராட்டம் நடத்துவதும் தமிழரின் நோக்கமாகும்” என்றும் பண்டாரநாயகா பத்திரிகையாளரிடம் தெரிவித்திருக்கிறார்.

“எனவே, இந்த நிலையில், சர்க்கார் தங்கள் முடிவை மாற்றுவது தமிழ் மக்களுக்கும் தமிழரசுக் கட்சிக்கும் அதிருப்தியைத் தரும் என்பதுடன், சிங்கள மக்களிடையே சலசலப்பையும் உண்டு பண்ணும்” என்றும் அவர் கூறினார்.

“சர்க்காரின் இந்த நடவடிக்கை, தமிழர்களுக்கு அநீதி இழைப்பதாக ஆகாது. இதுபற்றி ஏற்கனவே ஆட்சி மொழி (தனிச் சிங்கள) மசோதாவில் கூறியிருக்கிறோம்” என்றும் அவர் கூறியிருக்கிறார்.

அச்சுறுத்தல்?

தமிழரசுக் கட்சியினர் நடத்த உத்தேசித்திருக்கும் போராட்டம், தொடர்புடைய எல்லோருக்கும் பெரும் தீங்கிழைக்கும் என்றும், நாடு குழப்பத்தில் மூழ்கும் என்றும், எனவே, உத்தேச போராட்டத்தைக் கைவிடுமாறும் பண்டாரநாயகா மிரட்டியிருக்கிறாராம்.

தேர்தல் கூட்டங்கள்

குறிப்பிட்ட இடங்களில் மட்டுமே நடைபெறும்

கோவை, சன. 18—

வருகிற பொதுத் தேர்தலை ஒட்டி நடைபெறப்போகும் பொதுக் கூட்டங்கள் எல்லாம், குறிப்பிட்ட இடங்களில் மட்டுமேதான் நடைபெற இருக்கின்றன.

நகர்களிலும் கிராமப் பகுதிகளிலும், எல்லாக் கட்சித் தலைவர்களின் சம்மதத்தின்பேரில், குறிப்பிட்டப் பகுதிகள் போலீசாரால் தேர்ந்தெடுக்கப்படும்.

பிறகு வரிசைக்கிரமம் போன்ற முறைகளை ஒட்டி, போலீசார், கூட்டம் நடத்துவதற்கான லைசென்சுகள் வழங்குவர்.

ஒரே இடத்தில் இரண்டு கூட்டங்கள் நடைபெறுமானால், அவ்விரண்டு கூட்டங்களுக்கும் இடையில் 1 மணி நேரமாவது இடைநேரம் ஒதுக்கப்பட வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

மீண்டும் உரிமை வழங்கப்படுகிறது

சென்னை, சன. 17—

தேர்தல் செலவுகள் குறித்துச் சரியான கணக்குக் கொடுக்காததற்காகவும், இலஞ்சம், தவறான முறையில் செல்வாக்கைப் பயன்படுத்துதல் ஆகியவை நீங்கலாக மற்ற சட்ட விரோதமான குற்றங்கள் செய்தவர்களும் தேர்தல்களில் தங்கள் வாக்குகளைப் பதிவு செய்யவோ, சட்டசபைகளில் உறுப்பினர் பதவி வகிக்கவோ உரிமை மறுக்கப்பட்டிருந்தனர். இப்போது அவர்களுக்கு மீண்டும் அவ்வுரிமை வழங்கப்பட்டிருக்கிறதாம்!

ஆயிரக்கணக்கான குடியுரிமை மனுக்கள் நிராகரிப்பு

தமிழர்களை 'நாடற்றவர்' ஆக்குவதில் பண்டா சர்க்கார் தீவிரம்

கொழும்பு, ஜன. 16—

1,50,000 பேருக்கான சுமார் 50,000 குடியுரிமை மனுக்களை, பண்டாரநாயகா சர்க்கார் பதவியேற்ற இந்த 11 மாத காலத்தில் நிராகரித்திருக்கிறது என்று தெரியவருகிறது.

இவை, எந்தவித விசாரணையோ முன்னறிவிப்போ இல்லாமல் நிராகரிக்கப்பட்டவை என்றும், விசாரணைக்குப் பிறகு நிராகரிக்கப்பட்ட மனுக்களும் பல்லாயிரக்கணக்கானவை என்றும் கூறப்படுகிறது.

இலங்கைத் தமிழர் காங்கிரசின் சார்பில், நிராகரிக்கப்பட்ட மனுக்களை மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கைகளையும் பண்டா சர்க்கார் ஏற்றுக் கொண்டதாகத் தெரியக் காணோம்.

போலிக காரணங்களைக் காட்டி, எண்ணற்ற தமிழர்களுக்கு நியாயமாகத் தரவேண்டிய குடியுரிமையை வழங்கவும் பண்டா சர்க்கார் மறுத்து வருவதும் தெரிந்ததே!

தோழர் வன்னியசிங்கம் எம்.பி. மக்கள் சபையில், தமிழர் குடியுரிமை மறுப்புபற்றி சரமாரியான கேள்விகளைக் கேட்டிருக்கிறார்.

எத்தனைதான் எடுத்துச் சொன்னாலும், கொத்தலாவலை சர்க்காரைவிட தீவிரமான அளவிலும் வகையிலும், பண்டா சர்க்கார், தமிழருக்குக் குடியுரிமை மறுத்து வருகிறது.

'திட்ட மதிப்பைக் குறைக்க இயலாது'

ஆந்திரம் மறுத்துவிட்டது

ஹைதராபாத், சன. 16—

1957-58-ம் ஆண்டில் பல்வேறு திட்டங்களுக்கான செலவுக்கு ஆந்திர அரசாங்கம் மொத்தம் ரூ. 35,25,00,000 தேவைப்படுமென மதிப்பிட்டது.

இதில் ஒரு கோடி ரூபாயை குறைத்துக் கொள்ளுமாறு திட்டக் குழு கோரியது.

அவ்வாறு குறைத்துக் கொள்வதற்கு வழியேதுமில்லை என்று ஆந்திர அரசாங்கம் மறுத்துவிட்டதால், இந்தியப்பேரரசின் முடிவு எதிர்பார்க்கப்படுகிறதாம்.

'காஷ்மீர் ஏற்கனவே இந்தியாவுடன் இணைந்துவிட்டது'

அரசியல் நிர்ணய சபைத் தலைவர் கூறுகிறார்

புதுடில்லி, ஜன. 17—

'காஷ்மீர் ஏற்கனவே இந்தியாவுடன் இணைந்துவிட்டது' என்று காஷ்மீர் அரசியல் நிர்ணய சபைத் தலைவர் ஜி. எம். சதீக் பத்திரிகையாளரிடம் தெரிவித்திருக்கிறார்.

'இந்தியாவுடன் காஷ்மீர் இணைந்தது என்ற காஷ்மீர் அரசியல் நிர்ணய சபையின் தீர்ப்பை அமுலாகாமல் தடுத்து நிறுத்துவதுதான், பாகிஸ்தான் ஐ. நா. பாதுகாப்புச் சபைக்குச் சென்றிருப்பதின் நோக்கம் என்றால், அது, காலம் கடந்த ஒரு முயற்சியாகும்' என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

சென்னை சட்டசபைக்கான தொகுதிகள் விவரம்

★

செங்கற்பட்டு மாவட்டம் :

மதுராந்தகம் — (இரட்டை உறுப்பினர்)-மதுராந்தகம்தாலுகா; செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த களத்தூர் பிர்க்கா.

செங்கற்பட்டு — (இரட்டை உறுப்பினர்)-செங்கற்பட்டு தாலுகா (களத்தூர் நீங்கலாக); ஸ்ரீபெரும்புதூர் தாலுகாவைச் சேர்ந்த குன்னத்தூர், சேர்ப்பணஞ்சேரி பிர்க்காக்கள்.

சைதாப்பேட்டை — சைதாப்பேட்டை தாலுகாவில் உள்ள சைதாப்பேட்டை, பள்ளிகரணை பிர்க்காக்கள்.

பொன்னேரி-(இரட்டை உறுப்பினர்) — பொன்னேரி தாலுகா (கும்மிடிபூண்டி, சத்தியவேடு பிர்க்காக்கள் நீங்கலாக) சைதாப்பேட்டை தாலுகாவில் உள்ள மாதவரம், வில்லிவாக்கம், அமிஞ்சிகரை பிர்க்காக்கள்.

கும்மிடிபூண்டி —பொன்னேரி தாலுகாவைச் சேர்ந்த கும்மிடிபூண்டி, சத்தியவேடு பிர்க்காக்கள்.

திருவள்ளூர்-(இரட்டை உறுப்பினர்கள்)—திருவள்ளூர் தாலுகா.

ஸ்ரீபெரும்புதூர் — ஸ்ரீபெரும்புதூர் தாலுகா (குன்னத்தூர் சேர்ப்பணஞ்சேரி பிர்க்காக்கள் நீங்கலாக)

உத்திரமேரூர்— உத்திரமேரூர் தாலுகா; காஞ்சீபுரத்தைச் சேர்ந்த வடக்குமகரல், வாலாஜாபாத் பிர்க்காக்கள்.

காஞ்சீபுரம்—காஞ்சீபுரம் தாலுகாவிலுள்ள காஞ்சீபுரம், பரந்தூர் பிர்க்காக்கள்.

★

வட ஆற்காடு மாவட்டம் :

அரக்கோணம்—அரக்கோணம் தாலுகா;(காவேரிப்பாக்கம், பரஞ்சி பிர்க்காக்கள் நீங்கலாக)

சோளிங்கூர் — அரக்கோணம் தாலுகாவில் உள்ள காவேரிப்பாக்கம், பரஞ்சி பிர்க்காக்கள்; வாலாஜாபேட்டை தாலுகாவைச் சேர்ந்த சோளிங்கூர் பிர்க்கா.

செய்யூர்—செய்யூர் தாலுகா (அனக்காவூர், வாக்கடை பிர்க்காக்கள் நீங்கலாக)

வந்தவாசி—(இரட்டை உறுப்பினர்கள்)—வந்தவாசி தாலுகா; செய்யூர் தாலுகாவைச் சேர்ந்த அனக்காவூர், வாக்கடை பிர்க்காக்கள்.

ஆற்காடு—வாலாஜாபேட்டை தாலுகாவில் உள்ள ஆற்காடு, திமிரி, கலவை பிர்க்காக்கள்.

இராணிப்பேட்டை—வாலாஜாபேட்டை தாலுகாவிலுள்ள இராணிப்பேட்டை, வாலாஜாபேட்டை பிர்க்காக்கள்.

குடியாத்தம் — (இரட்டை உறுப்பினர்கள்) — குடியாத்தம் தாலுகா. (திப்பட்டு பிர்க்கா நீங்கலாக)

வேலூர்—வேலூர் தாலுகாவில் வடக்கு வேலூர் பிர்க்கா.

ஆம்பூர்—(இரட்டை உறுப்பினர்கள்)—வேலூர் தாலுகா (வேலூர் வடக்குபிர்க்காநீங்கலாக); குடியாத்தம் தாலுகாவில் திப்பட்டு பிர்க்கா; ஆரணி தாலுகாவில் அக்கிரகாரம்பாளையம்.

ஆரணி—ஆரணி தாலுகா (அக்கிரகாரம்பாளையம் நீங்கலாக)

போளூர்—போளூர் தாலுகா (தச்சம்பாடி, மண்டகொளத்தூர், கலசப்பாக்கம் பிர்க்காக்கள் நீங்கலாக).

துரிஞ்சபுரம்—போளூர் தாலுகாவில் உள்ள தச்சம்பாடி, மண்டகொளத்தூர், கலசப்பாக்கம் பிர்க்காக்கள்; திருவண்ணாமலை தாலுகாவில் உள்ள துரிஞ்சபுரம் பிர்க்கா.

திருவண்ணாமலை — (இரட்டை உறுப்பினர்கள்) திருவண்ணாமலை தாலுகா (துரிஞ்சபுரம் பிர்க்கா நீங்கலாக); செங்கம் தாலுகா (செங்கம் பிர்க்கா நீங்கலாக).

செங்கம்—செங்கம் தாலுகாவில் செங்கம் பிர்க்கா; கொரட்டி பிர்க்கா; திருப்பத்தூர் பிர்க்காவில் உள்ள 29 கிராமங்கள்.

வாணியம்பாடி— திருப்பத்தூர் தாலுகாவில் உள்ள வாணியம்பாடி, ஆலங்காயம் பிர்க்காக்கள்.

திருப்பத்தூர் — திருப்பத்தூர் தாலுகா (வாணியம்பாடி, ஆலங்காயம், கொரட்டி பிர்க்காக்கள் நீங்கலாக).

★

தென்னாற்காடு மாவட்டம் :

கள்ளக்குறிச்சி — (இரட்டை உறுப்பினர்கள்) கள்ளக்குறிச்சி தாலுகா (பாக்கம், ரிஷிவந்தியம் பிர்க்காக்கள் நீங்கலாக).

திருக்கோயிலூர்— (இரட்டை உறுப்பினர்கள்) திருக்கோயிலூர் தாலுகா (உளுந்தூர்பேட்டை, திருவெண்ணைநல்லூர், திருநாவலூர் பிர்க்காக்கள் நீங்கலாக); கள்ளக்குறிச்சி தாலுகாவில் உள்ள ரிஷிவந்தியம், பாக்கம் ஆகிய பிர்க்காக்கள்.

சத்தியமங்கலம் — செஞ்சி தாலுகா (செஞ்சி, வல்லம், மேலோலக்கூர் பிர்க்காக்கள் நீங்கலாக).

செஞ்சி—செஞ்சி தாலுகாவில் செஞ்சி, வல்லம், மேலோலக்கூர் பிர்க்காக்கள்; திண்டிவனம் தாலுகாவில் வட சிறுவலூர் பிர்க்கா.

திண்டிவனம்— (இரட்டை உறுப்பினர்கள்) திண்டிவனம் தாலுகா (வட சிறுவலூர் பிர்க்கா நீங்கலாக)

வளவனூர்—விழுப்புரம் தாலுகாவில் உள்ள வளவனூர், கண்டமங்கலம், விக்கிரவாண்டி பிர்க்காக்கள்.

விழுப்புரம் — விழுப்புரம் தாலுகா (வளவனூர், கண்டமங்கலம், விக்கிரவாண்டி பிர்க்காக்கள் நீங்கலாக).

உளுந்தூர்பேட்டை — திருக்கோயிலூர் தாலுகாவில் உள்ள உளுந்தூர்பேட்டை, திருவெண்ணைநல்லூர், திருநாவலூர் பிர்க்காக்கள்.

கடலூர்—கடலூர் தாலுகாவில் உள்ள கடலூர் ஓ. டி., மஞ்சகுப்பம் பிர்க்காக்கள்.

நெல்லிக்குப்பம் — (இரட்டை உறுப்பினர்கள்) கடலூர் தாலுகா (கடலூர் ஓ. டி., மஞ்சக்குப்பம் பிர்க்காக்கள் நீங்கலாக).

நல்லூர்—விருத்தாசலம் தாலுகாவில் நல்லூர், திட்டக்குடி, சிறுபாக்கம் பிர்க்காக்கள்.

விருத்தாசலம் —விருத்தாசலம் தாலுகா (கம்மாபுரம், நல்லூர், திட்டக்குடி, சிறுபாக்கம் பிர்க்காக்கள் நீங்கலாக).

புவனகிரி—சிதம்பரம் தாலுகாவில் புவனகிரி, சேத்தியாதோப்பு பிர்க்காக்கள்; விருத்தாசலம் தாலுகாவில் கம்மாபுரம்பிர்க்கா.

சிதம்பரம்—(இரட்டை உறுப்பினர்கள்) சிதம்பரம் தாலுகா (புவனகிரி, சேத்தியாதோப்பு பிர்க்காக்கள் நீங்கலாக).

★

சேலம் மாவட்டம்

அரூர்—(இரட்டை உறுப்பினர்கள்)—அரூர்தாலுகா; கிருஷ்ணகிரி தாலுகாவில் உத்தனக்கரை, கல்லாவி, சாந்தூர், மாத்தூர், பரகூர் பிர்க்காக்கள்.

கிருஷ்ணகிரி — கிருஷ்ணகிரி தாலுகாவில் உத்தனக்கரை, கல்லாவி, சாந்தூர், மாத்தூர், பரகூர், வேப்பனபள்ளி பிர்க்காக்கள் நீங்கலான பகுதிகள்.

உத்தனப்பள்ளி — ஒசூர் தாலுகாவில் உத்தனப்பள்ளி, கீழமங்கலம் பிர்க்காக்கள்; கிருஷ்ணகிரி தாலுகாவில் வேப்பனபள்ளி பிர்க்கா.

ஒசூர்—ஒசூர் தாலுகா (உத்தனப்பள்ளி, கீழமங்கலம் பிர்க்கா நீங்கலாக).

பெண்ணாகரம்—தர்மபுரி தாலுகாவில் இண்டூர், பெண்ணாகரம், பாலக்கோடு பிர்க்காக்கள்.

தர்மபுரி—தர்மபுரி தாலுகாவில் இண்டூர், பெண்ணாகரம், பாலக்கோடு பிர்க்காக்கள் நீங்கலான பகுதிகள்.

ஏர்காடு—(இரட்டை உறுப்பினர்கள்)—சேலம் தாலுகாவில் சேலம், வீரபாண்டி பிர்க்காக்கள் நீங்கலான பகுதிகள்; ஓமலூர் தாலுகாவில் ஓமலூர், காடையம்பட்டி பிர்க்காக்கள்.

சேலம்-1—சேலம் நகரில் 6 முதல் 32 வார்டுகள்.

சேலம்-2—சேலம் பிர்க்கா; சேலம் நகரில் 6 முதல் 32 வார்டுகள் நீங்கலான இதர வார்டுகள்.

வீரபாண்டி—சேலம் தாலுகாவில் வீரபாண்டி பிர்க்கா; இராசிபுரம் தாலுகாவில் வெண்ணந்தூர் பிர்க்கா.

தாரமங்கலம்—ஓமலூர் தாலுகாவில் தாரமங்கலம், மேச்சேரி பிர்க்காக்கள்.

மேட்டூர்—ஓமலூர் தாலுகாவில் மேட்டூர், நங்கவல்லி பிர்க்காக்கள்; திருச்செங்கோடு தாலுகாவில் எடப்பாடி பிர்க்காவைச் சேர்ந்த 8 கிராமங்கள்.

சங்கரி—திருச்செங்கோடு தாலுகாவில் சங்கரி பிர்க்கா; எடப்பாடி பிர்க்காவில் எட்டு கிராமங்கள் நீங்கலான பகுதிகள்.

திருச்செங்கோடு— (இரட்டை உறுப்பினர்கள்)—திருச்செங்கோடு தாலுகாவில், சங்கரி, எடப்பாடி பிர்க்காக்கள் நீங்கலாக.

நாமக்கல்—(இரட்டை உறுப்பினர்கள்) நாமக்கல் தாலுகாவில், புதுச்சத்திரம், சேந்தமங்கலம் பிர்க்காக்கள் நீங்கலான பகுதிகள்.

சேந்தமங்கலம் — நாமக்கல் தாலுகாவிலுள்ள புதுச்சத்திரம், சேந்தமங்கலம் பிர்க்காக்கள்.

இராசிபுரம்—இராசிபுரம் தாலுகாவில் வெண்ணந்தூர் பிர்க்கா நீங்கலான பகுதிகள்.

ஆத்தூர்— இரட்டை உறுப்பினர்கள்) ஆத்தூர் தாலுகா.

★

நீலகிரி மாவட்டம்:

குன்னூர்—குன்னூர் தாலுகா; உதகமண்டலம் தாலுகாவில் தூனேரி பிர்க்கா.

உதகமண்டலம்— கூடலூர் தாலுகா, உதகமண்டலம் தாலுகாவில் தூனேரி பிர்க்கா நீங்கலான பகுதி.

★

தஞ்சாவூர் மாவட்டம் :

சீர்காழி — இரட்டை உறுப்பினர்கள்—சீர்காழி தாலுகா; மாயவரம் தாலுகாவில் செம்பனார்கோவில், பொறையாறு பிர்க்காக்கள்.

மாயவரம் — இரட்டை உறுப்பினர்கள்—மாயவரம் தாலுகா—செம்பனார்கோவில், பொறையாறு பிர்க்காக்கள் நீங்கலாக; நன்னிலம் தாலுகாவில் பேரளம், திருவீழிமிழலை, குடவாசல் பிர்க்காக்கள்.

நன்னிலம்—இரட்டை உறுப்பினர்கள் — நன்னிலம் தாலுகா —பேரளம், திருவீழிமிழலை, குடவாசல் பிர்க்காக்கள் நீங்கலாக; நாகப்பட்டினம் தாலுகா —நாகப்பட்டினம், கீவளூர் பிர்க்காக்கள் நீங்கலாக; மன்னார்குடி தாலுகாவில் சாத்தனூர் பிர்க்கா.

நாகப்பட்டினம் — நாகப்பட்டினம்; நாகப்பட்டினம் தாலுகாவில் கீவளூர் பிர்க்கா.

திருத்துறைப்பூண்டி — இரட்டை உறுப்பினர்கள்—திருத்துறைப்பூண்டி தாலுகா; மன்னார்குடி தாலுகாவில் பாமனூர், கோட்டூர் பிர்க்காக்கள்.

மன்னார்குடி—மன்னார்குடி தாலுகா, பாமனூர், கோட்டூர், சாத்தனூர் பிர்க்காக்கள் நீங்கலாக.

ஆடுதுறை — கும்பகோணம் தாலுகாவில்—கும்பகோணம், நாச்சியார்கோவில் பிர்க்காக்கள் நீங்கலாக.

கும்பகோணம்—கும்பகோணம் தாலுகாவில் கும்பகோணம் பிர்க்கா.

பாபநாசம்—இரட்டை உறுப்பினர்கள்—பாபநாசம் தாலுகா, கும்பகோணம் தாலுகாவில் நாச்சியார்கோவில் பிர்க்கா; ஒரத்தநாடு தாலுகாவில் மூர்த்தியம்பலபுரம் பிர்க்கா.

திருவையாறு—தஞ்சாவூர் தாலுகாவில் திருவையாறு, கருக்காவேரி, திருக்காட்டுப்பள்ளி, செங்கிப்பட்டி பிர்க்காக்கள்.

தஞ்சாவூர்—தஞ்சாவூர் தாலுகாவில் தஞ்சாவூர் பிர்க்கா.

கந்தர்வகோட்டை-ஒரத்தநாடு தாலுகாவில் சிலத்தூர், காவாலிப்பட்டி பிர்க்காக்கள்; தஞ்சாவூர் தாலுகாவில் வல்லம், மடிகை பிர்க்காக்கள்.

அதிராம்பட்டினம் —பட்டுக்கோட்டை தாலுகாவில் அதிராம்பட்டினம், மதுக்கூர் பிர்க்காக்கள்; ஒரத்தநாடு தாலுகாவில் தொண்டராம்பேட்டை, ஒரத்தநாடு பிர்க்காக்கள்.

பட்டுக்கோட்டை— பட்டுக்கோட்டை தாலுகாவில் பட்டுக்கோட்டை, திருச்சிற்றம்பலம், சேதுபாவசத்திரம், பேராவூரணி, பெருமகளூர் பிர்க்காக்கள்.

அறந்தாங்கி—அறந்தாங்கி தாலுகா.

★

மதுரை மாவட்டம்:

உத்தமபாளையம் — கம்பம் பிர்க்கா; உத்தமபாளையம் பிர்க்காவைச் சேர்ந்த 5 கிராமங்கள்.

போடிநாயக்கனூர் — உத்தமபாளையம் பிர்க்கா (சில கிராமங்கள் நீங்கலாக) தேனி பிர்க்காவில் 17 கிராமங்கள்.

கொடைக்கானல் —கொடைக்கானல் தாலுகா; பெரியகுளம் தாலுகாவில் தேவதானபட்டி, தென்கரை பிர்க்காக்கள்.

தேனி—(இரட்டை உறுப்பினர்கள்)—பெரியகுளம் தாலுகாவில் உள்ள ஆண்டிப்பட்டி, தேனி பிர்க்காக்கள்—17 கிராமங்கள் நீங்கலாக; உத்தமபாளையம் பிர்க்காவில் சில கிராமங்கள்; திருமங்கலம் தாலுகாவில் சேடப்பட்டி பிர்க்கா.

உசிலம்பட்டி—திருமங்கலம் தாலுகாவில் உசிலம்பட்டி, வாலாந்தூர், பனிக்குண்டு பிர்க்காக்கள்.

திருமங்கலம்—திருமங்கலம் தாலுகாவில் திருமங்கலம், கல்லுப்பட்டி, கள்ளிகுடி பிர்க்காக்கள்.

மதுரை கிழக்கு—மதுரை நகரில் 1, 2, 4, முதல் 49, 51, 52, 58, 65, 66, 70 ஆகிய வார்டுகள்.

மதுரை சென்டிரல்—மதுரை நகரில் 50, 54, முதல் 64, 67, 68, 69, 71, முதல் 129 வார்டுகள் வரை.

திருப்பரங்குன்றம்—மதுரை தாலுகாவில் திருப்பரங்குன்றம், அவனியாபுரம், மதுரை பிர்க்காக்கள்—மதுரை 1, 2, 4 முதல் 129 வார்டுகள் நீங்கலாக.

நிலக்கோட்டை — இரட்டை உறுப்பினர்கள் — நிலக்கோட்டை தாலுகா.

மேலூர்—இரட்டை உறுப்பினர்கள்—மேலூர் தாலுகா—நத்தம் வடக்கு பிர்க்கா நீங்கலாக; மதுரை தாலுகா—மதுரை, திருப்பரங்குன்றம், அவனியாபுரம் பிர்க்காக்கள் நீங்கலாக.

வட மதுரை—திண்டுக்கல் தாலுகாவில் வட மதுரை, சாணார்பட்டி பிர்க்காக்கள்; மேலூர் தாலுகாவில் நத்தம் வடக்கு பிர்க்கா.

வேடசந்தூர் — வேடசந்தூர் தாலுகா.

திண்டுக்கல்—திண்டுக்கல் பிர்க்கா.

ஆத்தூர்—திண்டுக்கல் தாலுகாவில ஆத்தூர் பிர்க்கா.

ஒட்டன்சத்திரம்—பழனி தாலுகா—பழனி, கொரிகடவூர் பிர்க்காக்கள் நீங்கலாக.

பழனி—பழனி தாலுகாவில் பழனி, கொரிகடவூர் பிர்க்காக்கள்.

★

இராமநாதபுரம் மாவட்டம்:

திருக்கோட்டியூர் — திருப்பத்தூர் தாலுகா—காரைக்குடி, கல்லல பிர்க்காக்கள் நீங்கலாக;

காரைக்குடி — திருப்பத்தூர் தாலுகாவில் காரைக்குடி, கல்லல் பிர்க்காக்கள்.

சிவகங்கை—சிவகங்கை தாலுகாவில் சிவகங்கை, மடகுபட்டி, காளையார்கோவில் பிர்க்காக்கள்; திருவாடானை தாலுகாவில் திருவாடானை பிர்க்காவில் உள்ள 74-கிராமங்கள்.

திருவாடானை — திருவாடானை தாலுகா — 74 கிராமங்கள் நீங்கலாக.

மானாமதுரை—சிவகங்கை தாலுகாவில் திருப்புவனம், திருப்பாச்சேத்தி, மானாமதுரை பிர்க்காக்கள்; பரமக்குடி தாலுகாவில் இளையான்குடி பிர்க்கா.

பரமக்குடி—பரமக்குடி தாலுகா —இளையான்குடி பிர்க்கா நீங்கலாக.

இராமநாதபுரம் — இராமநாதபுரம் தாலுகா.

முதுகளத்தூர் — இரட்டை உறுப்பினர்கள்; முதுகளத்தூர் தாலுகா; அருப்புக்கோட்டை தாலுகா; — அருப்புக்கோட்டை, மண்டபசாலை பிர்க்காக்கள் நீங்கலாக.

அருப்புக்கோட்டை — அருப்புக்கோட்டை தாலுகாவில் அருப்புக்கோட்டை, மண்டபசாலை பிர்க்காக்கள்.

சாத்தூர்—சாத்தூர் தாலுகாவில் சாத்தூர், விருதுநகர் பிர்க்காக்கள்.

சிவகாசி—சாத்தூர் தாலுகா—சாத்தூர், விருதுநகர் பிர்க்காக்கள் நீங்கலாக.

ஸ்ரீவில்லிப்புத்தூர் – இரட்டை உறுப்பினர்கள்; — ஸ்ரீவில்லிப்புத்தூர் தாலுகா.

★

திருநெல்வேலி மாவட்டம்:

கோவில்பட்டி— கோவில்பட்டி தாலுகாவில் கோவில்பட்டி பிர்க்கா; சங்கரன்கோவில் தாலுகாவைச் சேர்ந்த திருவேங்கடம் பிர்க்கா.

கடம்பூர்—(இரட்டை உறுப்பினர்கள்)—கோவில்பட்டி தாலுகா (கோவில்பட்டி பிர்க்கா நீங்கலாக)

தூத்துக்குடி—ஸ்ரீவைகுண்டம் தாலுகாவில் தூத்துக்குடி பிர்க்கா.

ஸ்ரீவைகுண்டம்— ஸ்ரீவைகுண்டம் தாலுகா (தூத்துக்குடி பிர்க்கா நீங்கலாக.)

திருச்செந்தூர்—திருச்செந்தூர் தாலுகா. (உடன்குடி, சாத்தான்குளம் பிர்க்காக்கள் நீங்கலாக)

சாத்தான்குளம் — திருச்செந்தூர் தாலுகாவைச் சேர்ந்த சாத்தான்குளம், உடன்குடி பிர்க்காக்கள்; நாங்குனேரி தாலுகாவைச் சேர்ந்த விசயநாராயணம் பிர்க்கா.

இராதாபுரம்—இராதாபுரம் தாலுகா.

நாங்குனேரி — நாங்குனேரி தாலுகா (விசயநாராயணம் பிர்க்கா நீங்கலாக); அம்பாசமுத்திரம் தாலுகாவைச் சேர்ந்த மேலசேவல் பிர்க்கா.

திருநெல்வேலி—(இரட்டை உறுப்பினர்கள்) — திருநெல்வேலி தாலுகா.

அம்பாசமுத்திரம் — அம்பாசமுத்திரம் தாலுகாவைச் சேர்ந்த அம்பாசமுத்திரம், சேரன்மாதேவி பிர்க்காக்கள்.

கடையம் — அம்பாசமுத்திரம் தாலுகாவைச் சேர்ந்த கடையம், பாப்பக்குடி பிர்க்காக்கள்; தென்காசித் தாலுகாவைச் சேர்ந்த கீழப்பாவூர் பிர்க்கா.

தென்காசி—தென்காசி தாலுகாவைச் சேர்ந்த தென்காசி, பம்புலி பிர்க்காக்கள்; கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த செங்கோட்டை தாலுகா.

ஆலங்குளம் — தென்காசி தாலுகாவைச் சேர்ந்த ஆலங்குளம் பிர்க்கா; சங்கரன்கோவில் தாலுகாவைச் சேர்ந்த நீவிடநல்லூர், பழங்கோட்டை பிர்க்காக்கள்.

சங்கரன்கோவில் – (இரட்டை உறுப்பினர்கள்) -சங்கரன்கோவில் தாலுகாவைச் சேர்ந்த சங்கரன்கோவில், வாசுதேவநல்லூர் பிர்க்காக்கள்; தென்காசி தாலுகாவைச் சேர்ந்த கடையநல்லூர் பிர்க்கா.

★

கன்னியாகுமரி மாவட்டம்:

கன்னியாகுமரி — அகஸ்தீசுவரம் தாலுகாவைச் சேர்ந்த கன்னியாகுமரி, அகஸ்தீசுவரம், தாமரைக்குளம், குவசேகரம், மருங்கூர், தேரூர், இரவிபுதூர், சுசீந்திரம் கிராமங்கள்; தோவாளை தாலுகா.

(4-ம் பக்கம் பார்க்க)

*********-****-******

எஸ். முத்து

சட்டசபைக்கு மதுரை மத்தியத் தொகுதியில் போட்டியிடுகிறார்.

*********-**-******

வேண்டுகோள்

★

சேலம் — கோவை மாவட்டங்கள்பற்றிய தேர்வுக்குழு பணிகள் இன்னும் முடிவடையாமல் உள்ளதால், 29—1—57 முடிய எந்த நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்ள இயலாமல் உள்ளோம். முன்பு ஒப்புக் கொண்டுள்ள நிகழ்ச்சிகளையும் ரத்துசெய்ய நேரிட்டது குறித்து வருந்துகிறோம்.

ஈ. வெ. கி. சம்பத்
மு. கருணாநிதி

*******-**-********

அன்பில் - தருமலிங்கம்

சட்டசபைக்கு லால்குடி தொகுதியில் போட்டியிடுகிறார்.

வாக்காளரிடம் தரும் அடையாளச் சீட்டுகள்

தேர்தல் குழு அறிவிப்பு

தேர்தலில் நிற்கும் அபேட்சகரோ அல்லது ஒரு அரசியல் கட்சியோ வாக்காளர்களுக்கு அறிமுகச் சீட்டுகள் கொடுக்கலாம் என்றும், அச்சீட்டுகளில் ஓட்டுச் சாவடியின் வரிசை எண்ணும், வாக்காளர் பட்டியலில் உள்ள வாக்காளரின் வரிசை எண்ணும் குறிக்கப்படலாம் என்றும் தேர்தல் குழு முடிவு செய்துள்ளது.

அந்தச் சீட்டுகளில் அபேட்சகர்களின் பெயர், அவரது தேர்தல் சின்னம் ஆகியவைகளும் பொறிக்க

ஏ. கோவிந்தசாமி

சட்டசபைக்கு வளவனூர் தொகுதியில் போட்டியிடுகிறார்.

தேர்தல் கமிஷன் அனுமதியளித்துள்ளது; ஆனால், அந்த சீட்டுகளில் குறிப்பிட்ட அபேட்சகருக்கோ அல்லது குறிப்பிட்ட கட்சிக்கோ ஓட்டுப்போடுமாறு குறிப்பிடும் எழுத்துக்கள் இருக்கக்கூடாது என்றும், அவ்வாறான எழுத்துக்கள் அந்த சீட்டுக்களில் காணப்பட்டால் அது ஓட்டுச் சாவடிகளில் ஓட்டுக் கேட்பதற்கு சமம் ஆகுமென்றும், அது சட்டப்படி குற்றம் ஆகுமென்றும் தேர்தல் குழு அறிவித்துள்ளது.

என். எஸ். இளங்கோ

சட்டசபைக்கு அதிராம்பட்டிணம் தொகுதியில் போட்டியிடுகிறார்.

'அறிவிப்பு'க்குப் பின்னர் அமைச்சர் நிலைமை

சென்னை, ஜன. 18—

குடியரசுத் தலைவரும் கவர்னரும், மக்கள் சபை, மாநில சட்டசபைத் தொகுதிகளுக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க அறிக்கை வெளியிட்டபின், சென்னை மாநில அமைச்சர்கள் உத்தியோக பூர்வமான எவ்வித விழாக்களிலும் கலந்துகொள்ள மாட்டார்களாம்!

இராகவன் நூல் நிலைய நிதிக்காக திரைப்படக் காட்சி

சென்னை — திருவல்லிக்கேணி, இராகவன் நூல்நிலைய வளர்ச்சி நிதிக்காக, 20-1-57 காலை 10 மணிக்கு பாரகன் டாக்கீசில், தோழர் என் வி. நடராசன் தலைமையில் 'இதயகீதம்' திரைப் படக் காட்சி நடைபெறும்.

சட்டசபை அபேட்சகர்கள் முடிவாகாத தொகுதிகள்

கீழ்க்கண்ட தொகுதிகளில் போட்டியிடும் அபேட்சகர்களின் பெயர் விரைவில் அறிவிக்கப்படும் :—

சென்னை : பெரம்பூர் (பொது) ஆயிரம்விளக்கு தியாகராயநகர்

செங்கற்பட்டு : செங்கற்பட்டு (பொது)

வட ஆற்காடு : குடியேற்றம் (பொது), (தனி); சோளிங்கர்; ஆம்பூர் (பொது); திருவண்ணாமலை (தனி)

தென் ஆற்காடு : திருக்கோயிலூர் (தனி); சத்தியமங்கலம் ; செஞ்சி ; நெல்லிக்குப்பம் (தனி); சிதம்பரம் (தனி); கடலூர்; நல்லூர்

சேலம்: சங்கரி, நாமக்கல்; அரூர் (பொது), (தனி); கிருஷ்ணகிரி; சேலம் (2); ஏற்காடு (பொது), (தனி).

கோவை : காங்கேயம்; தாராபுரம்; பல்லடம்; கோவை-I; மேட்டுப்பாளையம்.

**********-***-*****

கண்ணதாசன்

சட்டசபைக்கு திருக்கோட்டியூர் தொகுதியில் போட்டியிடுகிறார்.

********-*********

தஞ்சை: மாயவரம் (தனி); குடந்தை; நாகை; மன்னார்குடி; ஆடுதுறை

திருச்சி : ஆலங்குடி (தனி); சீரங்கம்; பெரம்பலூர் (பொது) மணப்பாறை.

மதுரை : பழனி; நிலக்கோட்டை; ஒட்டன்சத்திரம்.

இராமநாதபுரம் : திருவாடானை; காரைக்குடி

நெல்லை : கோயில்பட்டி; திருநெல்வேலி

கன்னியாகுமரி : நாகர்கோயில்; கன்னியாகுமரி.

தேர்வுக்குழு தி. மு. க.

சட்டசபைக்கான தொகுதிகள்......

(3-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

நாகர்கோயில் — அகத்தீசுவரம் தாலுகாவைச் சேர்ந்த நாகர்கோயில், வடிவீசுவரம், தெங்கம்புதூர், தர்மபுரம், நீண்டகரை ஏ., நீண்டகரை பி; வடசேரி கிராமங்கள்; நாகர்கோயில் நகரம்.

குளச்சல்—கல்குளம் தாலுகாவைச் சேர்ந்த குளச்சல், மணவாளக்குறிச்சி, கடியாபட்டணம், தலைக்குளம், ஆலூர், இரணியல், திருவிதாங்கோடு கிராமங்கள் ; குளச்சல் முனிசிபாலிட்டி.

பத்மனுபபுரம் — கல்குளம் தாலுகா—குளச்சல், மணவாளக்குறிச்சி, கடியாபட்டிணம், தலைக்குளம், ஆலூர், இரணியல், திருவிதாங்கோடு கிராமங்கள், குளச்சல் முனிசிபாலிட்டி நீங்கலாக)

கிள்ளியூர் — விளவன்கோடு தாலுகாவைச் சேர்ந்த கொல்லங்கோடு, ஏழுதேசப்பட்டு, ஆறுதேசப்பட்டு, பைங்குளம், கின்னி

*******-***********

சத்தியவாணிமுத்து

சட்டசபைக்கு சென்னை — பெரம்பூர் தொகுதியில் போட்டியிடுகிறார்.

****

யூர், நட்டலம், மிதலம், கீழ்மிதலம் கிராமங்கள்.

விளவன்கோடு — விளவன்கோடு தாலுகாவைச் சேர்ந்த விள

சென்னை, கோவைத் தோழர்களுக்கு:

சென்னை, கோவை ஆகியவைகளின் சட்டசபைத் தொகுதிகளின் விவரம் முறையே 2—1—57, 3—1—57 'நம் நாடு' இதழ்களில் வெளியாகியுள்ளதென்பதை நினைவுபடுத்துகிறோம்.

வன்கோடு, பலுகால், இடக்கோடு களியால், அருமனை பக்கோடு, நல்லூர், குன்னத்தூர், மிடக்கும்பல் கிராமங்கள், மற்றும் குழித்துறை நகரம்.

★

திருச்சி மாவட்டம்

திருமயம்—திருமயம் தாலுகா

ஆலங்குடி—இரட்டை உறுப்பினர்கள்—ஆலங்குடி தாலுகா; குளத்தூர் தாலுகா—விரலிமலை பிர்க்கா நீங்கலாக.

ஆண்டநல்லூர் — திருச்சி தாலுகாவில் ஆண்டநல்லூர், மணிகண்டம், இலுப்பூர் பிர்க்காக்கள்; குளத்தூர் தாலுகாவில் விரலிமலை பிர்க்கா

திருச்சி-1—திருச்சி முனிசிபாலிடியில் 12 முதல் 33-வது வார்டுகள் வரை.

திருச்சி-2—திருச்சி பிர்க்கா—திருச்சி முனிசிபாலிடியில் 12 முதல் 33-வது வார்டுகளும், திருச்சி தாலுகாவில் திருவரம்பூர் பிர்க்காவும் நீங்கலாக.

ஸ்ரீரங்கம்—திருச்சி தாலுகாவில் ஸ்ரீரங்கம் பிர்க்கா; லால்குடி தாலு

****-******-*********

எஸ். எஸ். இராசேந்திரன்

சட்டசபைக்குத் தேனி தொகுதியில் போட்டியிடுகிறார்.

-*************

காவில் மணச்சநல்லூர், வாலாடி பிர்க்காக்கள்.

லால்குடி—லால்குடி தாலுகா—மணச்சநல்லூர், வாளாடி பிர்க்கா.

டி. பாலூர் — ஜெயங்கொண்டான் தாலுகாவில் திருமலவாயல், காமரசவல்லி, டி. பாலூர் பிர்க்காக்கள்.

ஜெயங்கொண்டான்—ஜெயங்கொண்டான் தாலுகாவில் ஜெயங்கொண்டான், ஆண்டிமடம் பிர்க்காக்கள்.

அரியலூர் — ஜெயங்கொண்டான் தாலுகாவில் அரியலூர், செந்துறை பிர்க்காக்கள்; பெரம்பலூர் தாலுகாவில் வடக்கலூர் பிர்க்கா.

பெரம்பலூர்—இரட்டை உறுப்பினர்கள்—பெரம்பலூர் தாலுகா—வடக்கலூர் பிர்க்கா நீங்கலாக; முசிறி தாலுகாவில் கண்ணனூர் பிர்க்கா.

முசிறி—இரட்டை உறுப்பினர்கள்; முசிறி தாலுகா—கண்ணனூர் பிர்க்கா நீங்கலாக.

கரூர்—கரூர் தாலுகாவில் கரூர், புகலூர் பிர்க்காக்கள்.

அரவக்குறிச்சி—கரூர் தாலுகாவில் அரவக்குறிச்சி, பரமதி, சின்னதாராபுரம் பிர்க்காக்கள்.

குளித்தலை—குளித்தலை தாலுகாவில் கட்டளை, குளித்தலை பிர்க

****

சி. பி. சிற்றரசு

சட்டசபைக்கு செங்கம் தொகுதியில் போட்டியிடுகிறார்.

********-*********-*

காக்கள்; கரூர் தாலுகாவில் வெள்ளியணை பிர்க்கா

பஞ்சப்பட்டி—குளித்தலை தாலுகாவில் பஞ்சப்பட்டி, கடவூர், வையம்பட்டி பிர்க்காக்கள்.

மணப்பாறை — குளித்தலை தாலுகாவைச் சேர்ந்த தோகமலை, மணப்பாறை, வளநாடு, மருங்காபுரி, துவரங்குறிச்சி பிர்க்காக்கள்.

பார்க்பேர் பொருட்காட்சி: 56-57

சென்னை S. I. A. A. திடலில் : 19-1-57 மாலை 6-30 மணிக்கு

திறந்தவெளி சகுந்தலா கலை அரங்கில்

என். வி. நடராசன் அவர்கள் தலைமையில்

கே. ஆர். ஆர். குழுவினர் நடிக்கும்

'வேலைக்காரி' தமிழ் நாடகம் (அண்ணா அவர்கள் எழுதியது)

தனிப்பகுதி : ரூ. 3, 2, 1, அணா 8. திறந்தவெளி இலவசம்

உஷா வீணை வாத்தியம் சர்க்கஸ், தந்திரக்காட்சி ஓவியக்கலை பாம்பே டான்ஸ், தேகப்பயிற்சி, திரு. சந்தானம். சந்துரு விகடம்—முதலியன

பிரவேசக் கட்டணம் 0—5—0

20—1—57 மாலை 6-30 மணிக்கு

கே. விநாயகம் M.A., L.T., F.R.C.S., M.L.A., M.C. தலைமையில்

கே. ஆர். ஆர். குழுவினர் நடிக்கும்

'ஓர் இரவு' தமிழ் நாடகம் (அண்ணா அவர்கள் எழுதியது)

எம் எஸ் மோகன்—காண்டிராக்டர்

விபத்துக்கு அதிகாரிகள் பொறுப்பல்லவாம் - வெள்ளமே காரணமாம்!

அரியலூர் விசாரணைக் குழு அறிக்கை

அரியலூர் இரயில் விபத்துபற்றி விசாரிக்க நிறுவப்பட்ட விசாரணைக் குழு தனது அறிக்கையை டில்லி சர்க்காரிடம் தந்துவிட்டதாகத் தெரிய வருகிறது.

விபத்திற்குக் காரணம் மருதையாற்று வெள்ளம்தான் என்றும் இரயில்வே எஞ்சினியரிங் இலாகாவை விபத்துக்குப் பொறுப்பாளியாக்க முடியாது என்றும் குழு கூறியிருக்கிறதாம் !

ஆனாலும், ஒரு சிலரது 'தவறு'களையும் குழு சுட்டிக் காட்டியிருக்கிறதாம்.

கடந்த டிசம்பர் திங்களில் நிறுவப்பட்ட இந்தக் குழுவின் அறிக்கையை சர்க்கார் சீக்கிரமே வெளியிடுவர் என்றும் தெரிகிறது.

நூற்றிஐம்பதுக்கு மேற்பட்டவர்களை பலி கொண்ட இந்த விபத்து காரணமாக இரயில்வே மந்திரியாயிருந்த லால்பகதூர் சாஸ்திரி இராஜினாமாச் செய்தது நினைவிருக்கலாம்.

காலம் மாறிவிட்டது!

திருச்சி. ஜன. 16—

சீரங்கத்தில், கடந்த கைப்பொங்கல் திருநாளன்று மிக ருசிகரமான சம்பவம் ஒன்று நிகழ்ந்திருக்கிறது.

இதுகாறும், திருவிழாக் காலங்களிலெல்லாம் யானை வாகன ஊர்வலத்தின்போது, அவ்வாகனத்தில், கோயில் அர்ச்சகரும் மற்றும் மூவரும் ஏறிக்கொள்வார்கள்; இவர்களுடன் சேர்த்து யானை வாகனத்தை, பலர் தூக்கி வருவார்கள்.

இந்த பொங்கல் பண்டிகையின் போது, வழக்கம்போல அர்ச்சகரும் மற்றும் மூவரும் வாகனத்தில் ஏறிக்கொண்டதும், வாகனத்தைத் தூக்கிச் செல்லத் தங்களாலியலாது என்று கூறி வாகனம் தூக்கிகள் மறுத்துவிட்டிருக்கின்றனர்!

வழக்கமாகத் தூக்கிச்செல்வோர் மறுத்துவிட்ட காரணத்தால், கோயிலிலுள்ள ஊழியர்களையும், 'பிராமண பாதம் தாங்கி'களையும்கொண்டு வாகனத்தைத் தூக்கிச் சென்றிருக்கின்றனராம் கோயில் தர்மகர்த்தாவும், மற்ற நிர்வாகிகளும்!

இதுபோலவே, திருவானைக்காவல் கோயிலில் நடைபெற்ற 'ஆருத்ரா' விழாவிலும் நடராசா விக்கிரகத்துடன் அர்ச்சகரையும் சுமக்கமாட்டோம் என்று மறுத்துவிட்டிருக்கின்றனராம்.

திருத்தம்

10-1-57 நம் நாடு (சென்னை) இதழில், 9-1-57 அன்று கடற்கரைக் கூட்டத்திற்கு தோழியர் இராசம் அவர்கள் தலைமை தாங்கியதாகச் செய்தி வந்திருக்கிறது. கூட்டத்திற்குத் தலைமை தாங்கியவர், திருமதி குப்பம்மாள் அவர்கள் என்று திருத்தி வாசித்துக் கொள்ளவேண்டுகிறோம். (ஆ-ர்)

சென்னை 7-வது வட்டத் தி. மு. கழக தோழர்கட்கு :

20—1—57 காலை 8-மணிக்கு, சென்னை 7-வது வட்டத்தில், வட்டக் கழகத் தோழர்கள் தி.மு.க. தேர்தல் நிதி திரட்ட ஊர்வலமாக வருவார்கள். ஊர்வலத்தில் கழகத் தோழர்கள், அனுதாபிகள், பொது மக்கள் அனைவரும் கலந்து கொள்ளக் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். துணைப் பொதுச்செயலாளர் என். வி நடராசன் ஊர்வலத்தில் கலந்துகொள்வார்.

நாகப்பட்டினம் தி. மு. கழகப் பொது உறுப்பினர்கட்கு:

20-1-57 மாலை 4½ மணிக்கு, நாகப்பட்டினம் தி மு. கழகப் பணிமனையில், கிளைக் கழகப் பொது உறுப்பினர் கூட்டம் நடைபெறும். துணைச் செயலாளர், செயற்குழு உறுப்பினர் தேர்தல் நடைபெறும். பொதுத் தேர்தல் குறித்தும் ஆலோசிக்கப்படும்.

பொங்கல் நாள் விழா

20—1—57 மாலை 6 மணிக்கு சென்னை—மயிலை சிந்தனையாளர் கழகச் சார்பில், விழாப் பொதுக் கூட்டம் அப்பு முதலி தெருவிலுள்ள திறந்தவெளி அரங்கில், தோழர் கௌதமன் தலைமையில் நடைபெறும்; தோழர்கள் க அன்பழகன், நன்னன், அறிவுடைநம்பி, பி ஆர் கோகுலகிருஷ்ணன், தோழியர் தாமரைச்செல்வி ஆகியோர் பேசுவர்.

* * *

20—1—57 மாலை 6-மணிக்கு, சென்னை—திருவல்லிக்கேணி கே. எஸ் பாண்டியன் படிப்பகச் சார்பில், எண் 1, சிவராமன் தெரு, படிப்பகப் பணிமனையில், தோழர் கோ. இளவரசு தலைமையில் விழா நடைபெறும் ; தோழர்கள் சே. முகாதர், எம். கே. மணி, மா. பா. சாரதி, நெல்லை கபிலன் மற்றும் படிப்பக உறுப்பினர்கள் பலரும் பேசுவர். தோழர் தில்லை ஆர். செயராமன் இன்னிசையுடன் கூட்டம் துவக்கப்படும்

* * *

20—1—57 மாலை 5 மணிக்கு, சென்னை —ஸ்ட்ராங்ஸ் ரோட், ஆண் பள்ளியில் கல்விச் சங்க ஆதரவில் திரு ப சுப்பிரமணியம் தலைமையில் 'பொங்கல் திருநாள்' குறித்து திரு. தொ. இரா. ஜெயராமன் பேசுவார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம் ஏ.